RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# சமரசமற்ற விமர்சகர் - இராஜம் கிருஷ்ணன்

பெ.தே. சௌத்ரி [அ, *] தா.அ. சிரிஷா [அ]

[அ] முதுகலைத் தமிழியல் மற்றும் உயராய்வுத்துறை, செல்லம்மாள் மகளிர் கல்லூரி, கிண்டி, சென்னை-600032, தமிழ்நாடு, , இந்தியா

# The Uncompromising Critic – Rajam Krishnan

P.D. Chowdhri [a, *], T.A. Sirisha [a]

[a] PG & Research Department of Tamil, Chellammal Women's College, Guindy, Chennai-600032, Tamilnadu, India

* Corresponding Author: pdchowdhri@gmail.com

Received: 16-12-2025
Revised: 16-02-2026
Accepted: 05-03-2026
Published: 16-03-2026

Check for updates

**ABSTRACT**

Rajam Krishnan occupies a seminal and autonomous position within Tamil feminist literary discourse. Her writings articulate a rigorous, uncompromising critique of social power structures without privileging or aligning with any singular ideological framework. Transcending distinctions of caste, religion, race, and gender, she persistently interrogates all forms of oppression embedded within this society. From the inception of her literary career until the end of her life, Rajam Krishnan remained steadfastly aligned with the marginalized, directing incisive criticism toward institutions and agents of domination and exploitation. Her critical engagement extends to the ideological foundations of the Vedas, epics, organized religion, concepts of divinity, the caste hierarchy, patriarchy, and class-based exploitation. She further interrogates conservative and regressive ideologies entrenched in classical Tamil literature, modern literary traditions, and contemporary media discourses. Rajam Krishnan's feminist vision actively endorses progressive social practices such as inter-caste marriage, women's autonomy in choosing life partners, divorce, remarriage, and women's education, thereby challenging normative moral and cultural frameworks. Through this sustained critical praxis, Rajam Krishnan emerges as an uncompromising ideologue whose literary trajectory reflects unwavering ethical commitment and resistance to ideological dilution or compromise.

**Keywords:** Rajam Krishnan, Feminist criticism, Social criticism, Caste and religious criticism.

## முன்னுரை

இராஜம் கிருஷ்ணன் - இது வெறும் பெயரல்ல, இருபதாம் நூற்றாண்டின் பெண்ணிய இலக்கியத்தின் முகவரி. நாவலாசிரியர், சிறுகதை ஆசிரியர், ஆய்வாளர், பெண்ணிய ஆளுமை எனப் பன்முகப் பரிமாணம் கொண்டு இயங்கியவராக இராஜம் கிருஷ்ணன் பரவலாக அறியப்படுகிறார். இவையன்றி, சமரசமற்ற இலக்கிய மற்றும் சமூக விமர்சகராகவும் திகழ்ந்துள்ளார். இலக்கியம் மற்றும் சமூகத்தின் மீதான இவரது சமரசமற்ற விமர்சனப் பார்வையை இவர்தம் படைப்புகளின்வழி கோடிட்டுக் காட்டுவதாக இக்கட்டுரை அமைகிறது.

## சாதி, மதம், வேதம் குறித்த விமர்சனங்கள்

இந்தியச் சமூகத்தின் மிகப்பெரிய புற்றுநோயாகச் சாதிய அமைப்பு வேரூன்றியுள்ளது. இதனால் பிறப்பிலேயே ஒரு சாரார் பெரும் துன்பத்திற்கு ஆளாக்கப்படுகின்றனர். இத்தகைய கொடுமையான சாதி ஒழிப்பிற்கான முதன்மை வழியாகப் புறமனமுறையை அண்ணல் அம்பேத்கர் முன்மொழிகிறார். இராஜம் கிருஷ்ணனும் சாதி மதம் பாராமல் திருமணம் புரிவதை வரவேற்கிறார். வேலி என்ற தனது

சிறுகதையில் சாதி மறுப்புத் திருமணம் புரியும் பெண்ணை, கணவன் வீட்டார் முழுமனதுடன் ஏற்காவிட்டாலும், அவள் சம்பளப் பணத்தை மட்டும் முழுமையாக வாங்கிக் கொள்வதை எடுத்துக்காட்டி சாதி மதம் என்ற வீராப்பெல்லாம் பணத்தின் முன் ஒன்றுமில்லாமல் போவதை சுட்டிக்காட்டுகிறார். "சாதிக்குத்தான் வேலியும், முள்ளும் போடப்படுகிறதேயன்றிப் பணத்துக்கு இல்லை"[1]

'எனக்கு மேலாக எத்தனை பேர் இருந்தால் என்ன, எனக்குக் கீழ் சிலர் இருக்கிறார்கள்' எனும் எண்ணமே சாதியப் படிநிலை இன்றளவும் நீர்த்துப் போகாததற்குக் காரணமாக அமைந்துள்ளது. இக்கருத்தைச் சேற்றில் மனிதர்கள் என்ற நாவலில் பிள்ளை சமூகத்தால் ஒடுக்கப்படும் பள்ளர் சமூக மக்கள், தம் பங்கிற்குத் தமக்குக் கீழ் உள்ள பறையர் சமூக மக்களின் மீது ஆதிக்கத்தைச் செலுத்துவதையும், தான் ஒரு சாதிக்கு அடிமையானாலும் தமக்குக் கீழாக ஒரு சாதியப் பிரிவினரை வைத்திருப்பதைக்கொண்டு பெருமை பேசித் திரிவதையும் எடுத்துரைக்கிறார். "நம்ம சனங்களுக்கு தாங்க ஒரு முதலாளியா, மிராசா, சமீனா இருக்கணும், நமக்கு கீழ நாலு மனுஷன் கைகட்டி சேவகம் பண்ணனும்ங்கற உணர்வு ரெத்தத்தோட ஊறிப்போயிருக்கு."[2]

மதத்தின் பெயரால் மத குருமார்கள் பெண்களின் உரிமையில் தலையிட்டு பெண்களின் முன்னேற்றத்திற்குத் தடையாய் அமைவதாய் தம் படைப்புகளில் சுட்டிக்காட்டுகிறார். "காவி தரித்துத் துறவறம் என்ற நிலையில், சமயம் பரிபாலிக்கும் இந்த குரு பீடங்கள் உண்மையில் மக்களை வாழ வைக்கத்தான் உருவாயினவா? இதை ஆராயும்போது பெண்ணின் வீழ்ச்சிப் பரிணாமத்தின் கூறுகளையும் பார்க்க முடிகிறது"[3]

மதத்தின் பெயரால் தனி மனித சுதந்திரத்தில் இவர்கள் தலையிடுவதனை உத்தரகாண்டம் என்ற தனது நாவலில் குறிப்பிடுகிறார். "இந்த லட்சணத்தில் பசுவதைத் தடைச் சட்டமாம்! கோமாதா குலமாதா … பசுக்களைக் கும்பிட்டுப் பூசை செய்ய வேணும் என்று மடத்து ஆசாரிய சுவாமிகள் இப்போதும் சொல்கின்றார்."[4] என உணவில் அரசியல் செய்வதைத் தவறு என்று எடுத்துரைக்கிறார்.

வேதகாலத்தில் பெண்கள் கல்வி கற்கும் உரிமை, இணையைத் தேர்வு செய்யும் உரிமை முதலான உரிமைகளைப் பெற்று சுதந்திரமாக வாழ்ந்ததாகவும், பின்நாட்களில் ஏற்படுத்தப்பட்ட சதியால் உரிமைகள் யாவும் பறிக்கப்பட்டன என்றும் சான்றுகளின் வழி எடுத்துரைக்கிறார். "வேதங்களில் இருக்கிற கருத்துகள் தான் புராணங்களில் இருக்கின்றன, நீங்கள் புராண கதையையும் நீதி நூல்களையும் படிக்கலாமே" என்று கூறிய சங்கராச்சாரியாரைக் கடுமையாக விமர்சிக்கிறார். "அம்மா நான் பால் குடிக்க கூடாதா ஏனம்மா? என்று அஞ்ஞான குழந்தை கேட்கிறது. பாலில் இருந்து தான அம்மா இந்த புளித்த மோர் பிறந்தது இந்த நீராகாரத்தில் மோரின் சுவை உண்டு.. உனக்கு இதுவே நல்லதம்மா"[5] என்று வேதம் கற்க **முற்படும்** பெண்க**ளைப்** புராணங்கள் கற்கச் சொல்லும் சங்கராச்சாரியாரை விமர்சிக்கிறார்.

## இராமாயணம், பாரதம், கீதை குறித்த விமர்சனம்

ராமாயணத்தில் சீதைக்கு ஏற்பட்ட கொடுமைகளை வெளிக்காட்டும் வகையில் சத்திய வேள்வி, **வ**னதேவியின் மைந்தர்கள் போன்ற நாவல்களைப் படைத்துள்ளார். இதில் சீதை எந்த வர்ணத்தைச் சேர்ந்தவர் என்று தெரியாததாலேயே அவர் பல இன்னல்களுக்கு ஆளானார் என்பதை எடுத்துரைக்கிறார். சீதை பூமாதேவிக்குப் பிறந்தவள் என்பதைக் கட்டுக்கதை என்றும், அவள் **க**ணிகையர் மகள் என்று**ம்** குறிப்பிடுகிறார். தசரத மன்ன**னுக்குச்** சந்ததி உருவாகவில்லை எனினும் மன்னனின் ஆண்மை குறித்த கரும்புள்ளி எந்த இடத்திலும் வரவில்லை என்று கேள்வி எழுப்புகிறார். ராமன் கடல் கடந்து வந்து அரக்கரைக் கொன்றது சீதையை மீட்டு அழைத்துச் செல்வதற்காக இல்லை, அவன் மீது விழுந்துவிட்ட பழியைப் போக்கிக் கொள்வதற்காகவே இலங்கையை வென்றதாக ராமன் கூறியதை எடுத்துக்காட்டுகிறார்.[6]

மகாபாரதத்தில் காந்தாரி, திரௌபதி, குந்தி முதலா**னோர்**க்கு நடந்த கொடுமைகளை அவர்களின் பக்கம் நின்று எதிர்த்துக் கேட்கிறார். **திரௌபதி ஐவர்க்கு மனைவி ஆக்கப்பட்டதே** கொடுமை, அதற்கப்பால் சூதாட்டத்தில் பனையப் பொருளாகி நடுச்சபையில் அவமானம் செய்யப்பட கொண்டுவரப்படுகிறாள். **ஒரு** பெண் தன்மீதே சுயஉரிமை அற்றவளாக நடத்தப்படுவதன்மூலம் பெண்மை கொச்சைப்படுத்தப்படுகிறது[7] என்றும், காந்தாரி ஆண்களின் வலிமைக்கு முன் ஒடுங்க வேண்டி வந்த நிலையைத் தன் கண்களைக் கட்டிக் கொள்வதன் மூலம் எதிர்ப்பாக, வெறுப்பாக காட்டிக்கொண்டு இருக்கலாம்[8] என்று விருப்பமற்ற மனம் செய்து வைக்கப்பட்ட காந்தாரியின் மனநிலை குறித்தும் வெளிப்படுத்துகிறார்.

'கீதை ஒளியில் பெண் தர்மம்' என்ற கட்டுரையில் பெண்க**ள்** குலம், ஜாதி, வர்ணம் என்ற பிரிவுகளை அப்படியே காப்பதற்குரிய முக்கிய கருவிகளாகக் கருதப்பட்டனர் என்றும், பெண்க**ள்** நான்காம் வரு**ண**த்திற்கும் அடுத்த நிலையில் வைக்கப்பட்டனர் என்றும், ஆரியர் தம் இனத்தைத்

தூய்மையாக வைத்துக் கொள்வதற்காகப் பெண்களை அடிமையாக வைத்திருந்தனர் என்றும் கீதையை மேற்கோள் காட்டி பல்வேறு விமர்சனங்களை முன் வைக்கிறார்[9].

## சங்க இலக்கியமும் திருக்குறளும்

சங்க இலக்கியங்களில் கைமை நோம்பும் தீ புகுதலும் கற்பு நெறி என்ற பெயரில் பெண்களின் மீது திணிக்கப்பட்டுள்ளது என்பதைப் பல சங்க இலக்கியப் பாடல்களை மேற்கோள் காட்டி எடுத்துரைக்கிறார். கைமை நோன்பு இருப்பதைவிடத் தீ புகுந்து இறப்பதே மேல் என பூதபாண்டியன் தேவி பெருங்கோப் பெண்டு கூறுவதைப், புறநானூற்று 246-வது பாடலை மேற்கோள்காட்டி கைமை நோன்பு எத்தகைய கொடுமை வாய்ந்தது என்பதை எடுத்துரைக்கிறார். "பெண்களின் உரிமைகள் பறிக்கப்பட்டு ஒடுக்குதற்குரிய நெறிகளாக ஒரு பக்க கற்பு நெறியும் கைமை நெறியுமே தீவிரமாக்கப்பட்ட நிலையை காண முடிகிறது" [10].

திருக்குறள், ஆணுக்கு அடங்கி நடப்பதே பெண்ணிற்கான குணம் என்று கூறுவதை 'வாழ்க்கைத் துணைநலம்' என்ற அதிகாரத்தை எடுத்துக்காட்டி விமர்சிக்கிறார். 'தற்காத்துத் தற்கொண்டான் பேணி' என்ற குறலையும், 'தெய்வம் தொழாள் கொழுநற் தொழுதெழுவாள்' என்ற குறளையும் எடுத்துக் கூறி, குழந்தைகளுக்கு ஆசை காட்டுவது போல் பெண்களை ஆசை காட்டி அடிபணிய வைப்பதாய் குறிப்பிடுகிறார்[11].

## ஊடகம்

தற்காலத்திய பத்திரிக்கைகள், ஊடகங்கள் பெண்களின் உடலைக் கவர்ச்சிப் பொருளாகச் சித்தரித்து வியாபாரமாக்குவதைப் பற்றி,"பத்திரிகைகள் சீரழியுது இன்னிக்கு இந்தப் பத்திரிகை சினிமா சுவரொட்டி எல்லாத்திலும் பொம்பளையத் துகிலுரியற வேலையாகத்தான் இருக்கு"[12] என்று விமர்சிக்கிறார்.

## முடிவுரை

இராஜம் கிருஷ்ணன் தான் எழுதத் தொடங்கியது முதல், தனது இறுதி மூச்சு வரையில் தமிழ்நாடு தொடங்கி இந்திய மற்றும் உலக அளவில் பெண்ணியம் குறித்த ஒரு சிறு அசைவையும் தவறவிடாமல் உற்று நோக்கி அது குறித்த தன் கருத்தினை நேர்மையாகப் பதிவு செய்துள்ளார்.

## References

இராஜம் கிருஷ்ணன், (1995) இந்திய சமுதாய வரலாற்றில் பெண்மை, சின்ன நிலா அச்சகம்

இராஜம் கிருஷ்ணன், (2002) உத்தரகாண்டம், தாகம் பதிப்பகம், முதல் பதிப்பு.

இராஜம் கிருஷ்ணன், (1991) காலந்தோறும் பெண், தாகம் பதிப்பகம்.

இராஜம் கிருஷ்ணன், (2025) சிறுகதைகள், சீதை பதிப்பகம்.

இராஜம் கிருஷ்ணன், (2001) சேற்றில் மனிதர்கள், தாகம் பதிப்பகம்.

இராஜம் கிருஷ்ணன், (2003) பெண் விடுதலை, தாகம் பதிப்பகம்.

இராஜம் கிருஷ்ணன், (2021) வனதேவியின் மைந்தர்கள், தாகம் பதிப்பகம்

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License